**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 04 October-December 2023**

# தொல்காப்பியம்-நூன்மரபு கூறும் தமிழ் எழுத்துகள்

**பா.ஜெயபுனிதாராஜேஸ்வரி**
பதிவு எண்: 22112014022006
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர். ச.மல்லிகா**
நெறியாளர் &இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை &தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002.

**முன்னுரை:**

தமிழ்கூறு நல்லுலகத்தின் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றின் இலக்கணம் கூறுகின்ற தொன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம். இந்நூல் மொழியியல் அறிஞர்கள் வியந்து பாராட்டும் மொழிசார் நுட்பங்களைக் கூறும் ஆற்றல் கொண்டது. எழுத்ததிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களின் முதல் இயலான நூன்மரபு தனிநின்ற எழுத்துகளைப் பற்றி எடுத்துரைக்கின்றது. பேச்சு மொழி, எழுத்து மொழிக்கு அடிப்படையாக எழுத்துகள் அமைகின்றன. தமிழ் எழுத்துகளின் வகைகள், வரிவடிவம், எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு பற்றித் தொல்காப்பிய நூன்மரபு வழியாக ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வு அணுகுமுறை:**

மொழி வழங்குவதற்கு எழுத்துகள் காரணமாக அமைகின்றன. தமிழ் மொழியின் எழுத்துகளைத் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் உள்ள நூன்மரபு வழியாகப் பகுத்துக் கூறுவதால் பகுப்புமுறைத் திறனாய்வும் இதனை விளக்கிக் கூறுகின்ற போது விளக்கமுறைத் திறனாய்வும் இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**எழுத்து:**

மொழி மக்களின் அறிவாற்றல் வளர்ச்சியால் கூட்டு வாழ்விற்குப் படைத்துக் கொள்ளப்பட்ட கருவி. மொழி மக்களை மாக்களில் இருந்து வேறுபடுத்தி உயர்த்திக் காட்டுகிறது. மற்ற உயிரினங்களில் இருந்து மனிதனைப் பிரித்துக்காட்ட பயன்படுவது மொழி. மொழி சொற்களால் உருவாகிறது. சொல் எழுத்துகளின் சேர்க்கையால் உருவாகிறது. இலக்கணிகள் உரையாடுகின்ற சொற்களில் உள்ள ஒலிக்கூறுகளை உற்று நோக்கி எழுத்தின் ஒலியையும் வடிவத்தையும் கண்டறிந்துள்ளனர். தமிழில் எழுத்து என்ற சொல் ஒலிவடிவத்தையும், வரிவடிவத்தையும் குறிக்கின்றது. தமிழ் எழுத்துகளை வகுத்துப் பெயரிடும் காலத்தில் முன்னோர்கள் வாழ்வில் மெய்யுணர்வில் சிறந்திருந்தனர் என்பதற்கு உயிர், மெய் என்ற எழுத்துகளின்

பெயரிடுதல் சிறந்த சான்றாக அமைகின்றது. 'எழுத்தாவது சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலி' என்று ஆறுமுகநாவலர் கூறுகின்றார். இதன் மூலம் மொழிக்கு முதற்காரணமாக அமைவது ஒலி, அவ்வொலியினை வரிவடிவமாக்குவது எழுத்து என்பது தெளிவாகின்றது.

**தொல்காப்பிய எழுத்ததிகார அமைப்பு:**

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களாக அமைந்துள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களைக் கொண்டு திகழ்கிறது. இவ்வதிகாரப் பிரிவினைத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தின் '**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி**'என்ற வரியின் மூலம் உணர முடிகிறது. தொல்காப்பிய எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்று ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் மொத்தம் நானூற்றி எண்பத்தி மூன்று நூற்பாக்கள் காணப்படுகின்றன. நூன்மரபில் முப்பத்தி மூன்று நூற்பாக்கள் உள்ளன.

**நூன்மரபின் சிறப்புகள்:**

மொழிக்கு அடிப்படையாக அமைவது எழுத்து. எழுத்ததிகாரத்தில் இடம் பெறும் முதல் இயலான நூன்மரபு என்பதன் பெயர்க்காரணத்தை இளம்பூரணனார், 'எழுத்ததிகாரத்தில் சொல்லப்படுகின்ற எழுத்திலக்கணத்தைத் தொகுத்து கூறுவதனால் நூன்மரபு' என்கிறார். நச்சினார்க்கினியர் 'நூலுக்கு மரபாகத் துணையாக இருப்பதால் நூன்மரபு ஆயிற்று' என்று கூறுகிறார். மேலும் திருஞானசம்பந்தர் 'எழுத்ததிகாரம் என்பதில் இடம்பெற்ற எழுத்து என்னும் சொல் மீண்டும் எழுத்து மரபு என இயலாக வருவதைத் தவிர்க்கக் கருதித் தொல்காப்பியர் இவ்வியலுக்கு நூன்மரபு எனப் பெயரிட்டார்' என்று எடுத்துரைக்கிறார். நூல் மரபு என்பது **"மெல்லெழுத் தியைபின் னகார மாகும்"** (தொல்.நூ.எ.368) என்ற விதிப்படி நூல்+மரபு= நூன்மரபு என்று பெயர் வந்துள்ளமை தெளிவாகப் புலனாகிறது.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் நூன்மரபு, மொழி மரபு, தொகை மரபு என்ற மூன்று இயல்களுக்கு மரபு என்று பெயரிட்டுள்ளார். தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் விளிமரபு என்ற இயல் மரபு என்ற பெயரில் அமைந்துள்ளது. இந்த நான்கு இயல்கள் மட்டும் மரபு என்ற பெயரில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. மீதமுள்ள இருபத்தி மூன்று இயல்களில் கிளவியாக்கம் மட்டும் ஆக்கம் என்ற பெயரில் அமைந்துள்ளது. மற்றவை இயல்கள் என்ற பெயரில் அமைந்துள்ளன. மரபு என்பது முன்னோர் கூறியவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வது. இதனைத் தொல்காப்பியர் சிறப்புப் பாயிரத்தில் '**முந்து நூல் கண்டு முறைப்படி எண்ணி**'என்று மொழிகிறார். இதற்கு இளம்பூரணனார் 'செந்தமிழினது இயல்பு பொருந்தின செந்தமிழ் நிலத்து வழக்கொடு முதல் நூல்களில் சொன்னவற்றினைக் கண்டு அவ்விலக்கணம் முறைப்பட ஆராய்ந்து' இலக்கணம் செய்துள்ளார் தொல்காப்பியர் என உரை வகுக்கின்றார். இக்கருத்தினை நன்னூலார்,

**"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"** (நன்னூல்,நூ.எ.388)

என்று கூறுகிறார். இதன் மூலம் மரபு என்பது மரபின் காரணமாக வழங்கப்படுவதை எடுத்துரைப்பதற்காக மரபு என்று பெயர் வைத்துள்ளமை புலனாகிறது. நூலுக்கு அடிப்படையாக எழுத்துகள் அமைகின்றன. அந்த எழுத்துகளின் வகை தொகைகளைப் பற்றி இவ்வியல் எடுத்துரைப்பதால் நூல் என்று பெயர் வைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தின் முதல் இயலுக்கு நூன்மரபு எனப் பெயர் வைத்து அதில் தமிழ் எழுத்துகளின் வகை தொகையை முந்து நூலின் படி கூறுகின்றார் என்பதை இதன் வழித் தெளிவாக உணரமுடிகிறது.

**தமிழ் எழுத்துகள்:**

எழுத்து என்பது மொழியினை விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்ற மூலம். ஒருவரோடு ஒருவர் பேசுகின்ற போது பேச்சின் பொருளை எழுப்புகின்ற ஒலிகள் வழி விளங்கிக் கொள்ள முடிகிறது. நூலை வாசிக்கின்ற போது அந்நூலின் பொருளை அதில் இடம் பெற்றுள்ள எழுத்துகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. மொழியினை விளங்கிக் கொள்வதற்குப் பேச்சொலி, எழுத்து இவை இரண்டும் அடிப்படையாக அமைகின்றன. தமிழ் எழுத்துகளைத் தொல்காப்பியர்,

**"எழுத்தெனப் படுவ**
**அகரமுதல் னகர விறுவாய்**
**முப்பஃ தென்ப**
**சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே"** (தொல்.நூ.எ.1)

என்றும்,

**"அவைதாம்**
**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"** (தொல்.நூ.எ.2)

என்றும் கூறுகிறார். இதில் அகரம் முதல் னகரம் வரை கூறப்படுகின்ற உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு என்பதனை மாத்திரை அளபு கூறுகின்ற இடத்தில் (நூ.எ.3,4) புலப்படுத்துகிறார். இவ் முப்பது எழுத்துகளுடன் சார்பெழுத்துகள் மூன்றினை இணைத்து எழுத்துகள் முப்பத்து மூன்று என்கிறார் தொல்காப்பியர். அகரத்தை முதலாவதாக வைத்து பின்னர் னகரம் வைக்கப்பட்டுள்ளது. இளம்பூரணனார் இதனை, 'அகரம் தானும் இயங்கித் தனி மெய்களை இயக்குதற் சிறப்பான் முன் வைக்கப்பட்டது' என்று வைப்பு முறைக்கான காரணத்தைக் கூறுகிறார். சிவஞான முனிவர் இதனை, **"அகரம் முதலிய பன்னீர் உயிரும் தனித்து இயங்கும் ஆற்றல் உடைமையானும் ககரம் முதலிய பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடியல்லது இயங்கும் ஆற்றல் இன்மையானும் அச்சிறப்பும் சிறப்பின்மையும் நோக்கி உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன"**என்று தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி நூலில் (பக்.31-32) கூறுகிறார்.

சார்பெழுத்துக்களாகக் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற மூன்றினைக் கூறுகிறார். முப்பது எழுத்துடன் இம்மூன்றினை இணைத்து முப்பத்தி மூன்றாகக் கூறியுள்ளார்.

இதன் மூலம் தொல்காப்பியர் தமிழ் எழுத்துகளை முப்பத்தி மூன்றாக பாகுபடுத்திய விதம் புலனாகிறது.

**ஒலியளவு:**

ஒலியளவு என்பது எழுத்தை உச்சரிக்கும் கால அளவு. இதனைத் தொல்காப்பியர்,

**"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே"** (தொல்.நூ.எ.7)

என்று கண்ணிமைக்கின்ற நேரத்தைக் கைவிரல் நொடிக்கின்ற நேரத்தை மாத்திரை அளவாக எழுத்துகளின் ஒலியளவினைக் கூறுகிறார்.

**"அவற்றுள்**
**ஆ இ உ**
**ஏ ஒ வென்னும் அப்பால் ஐந்தும்**
**ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப"** (தொல்.நூ.எ.3)

என்றும்,

**"ஆ ஈ ஊ ஏ ஐ**
**ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்**
**ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப**" (தொல்.நூ.எ.4)

என்றும் கூறுகிறார். உயிர் எழுத்துகள் ஒலிக்கின்ற கால அளவு முறையினைக் கொண்டு குறில் ஒரு மாத்திரை, நெடில் இரு மாத்திரை என உரைக்கிறார். மேலும் தொல்காப்பியர்,

**"மெய்யோ டியையினும் உயிரியல் திரியா"** (தொல்.நூ.எ.10)
**"மெய்யின் அளபே அரையென மொழிப"** (தொல்.நூ.எ.11)
**"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே"** (தொல்.நூ.எ.12)
**"அரையளபு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகுந் தெரியுங் காலை"** (தொல்.நூ.எ.13)

என்ற நூற்பாக்களில் மெய்யெழுத்து, சார்பெழுத்தின் மாத்திரை அளபுகளை அரையாக, எழுத்துகள் குறுகி ஒலிக்கின்ற இடமாக மகரக்குறுக்கத்திற்கு கால் மாத்திரை அளபுகளை எடுத்துரைக்கிறார். இக்கருத்தினை சிவஞான முனிவர் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி என்னும் நூலில் (ப.32) **"நெட்டெழுத்தாவது நீரும் நீரும் சேர்ந்தாற்போலக் குற்றெழுத்து இரண்டு ஒத்து நின்று நீண்டு இசைப்பது ஒன்றாகலின் அஃது உணர்ந்து கோடற்குக் குற்றெழுத்துகளின் பின்னர் நெட்டெழுத்துகள் வைக்கப்பட்டன"**என்று உயிர் எழுத்துகளின் ஒலியளவு வைப்புமுறைத் தன்மையினைக் கூறுகிறார்.

எழுத்துகளின் ஒலியளவினைக் கூறுகின்றபோது கணித முறையினைக் கையாண்டுள்ள விதம் தொல்காப்பியரின் நுண்ணிய அறிவுத்திறனைக் காட்டுகின்றது. எழுத்துகளைக் கூறுகின்ற போது எடுத்துக்கொள்கின்ற கால அளவானது கைந்நொடிக்கின்ற, கண் இமைக்கின்ற நேரமாகத் தமிழ் எழுத்துகளுக்குக் கணக்கிடப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

**வரிவடிவம்**:

வரிவடிவம் என்பது எழுதப்பட்ட எழுத்துளகளின் உருவத்தைக் குறிக்கின்றது. **"மெய்யின்இயற்கை புள்ளியோடு நிலையல்"** (தொல்.நூ.எ.15) என்ற நூற்பாவில் மெய்யெழுத்தானது புள்ளி பெற்று வரும் என்று கூறுகிறார். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம்((முப்பாற்புள்ளி) என்ற மூன்று சார்பெழுத்துகள் புள்ளியிட்டு எழுதப்படுவதை (தொல்.நூ.எ.2) எடுத்துரைக்கிறார். மேலும், **"உட்பெறு புள்ளி உருவா கும்மே"** (தொல்.நூ.எ.14) என்றும் **"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"** (தொல்.நூ.எ.16) என்றும் மகரக்குறுக்கம் உட்புள்ளி பெற்று வருவதையும், எ,ஒகரம் புள்ளி வைத்து எழுதப்படுவதையும் எடுத்துரைக்கிறார். இதனை வீரமாமுனிவர் ஏ,ஓ என்று நெடிலாக மாற்றிய வடிவம் தற்காலத்தில் வழக்கில் உள்ளன. புள்ளி இல்லா எழுத்துகள் நெட்டெழுத்துகளாக வழக்கில் இருப்பது தெளிவாகின்றது. தொல்காப்பியர் உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவத்தைப்,

**"புள்ளி யில்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவுதிரிநி துயிர்த்தலும்**
**ஆயி ரியல உயிர்த்த லாறே"** (தொல்.நூ.எ.17)

என்று மெய்யெழுத்துகள் புள்ளியை நீக்கி அகரமோடு சேர்ந்தும், மற்றைய உயிர்களுடன் சேர்ந்தும் உயிர்மெய்யாக வரிவடிவம் பெறுகின்றன என்கிறார். உயிர்மெய் எழுத்துகளைக் கூறுகின்ற போது உயிர் எழுத்து தனித்தியங்கும் ஆற்றல் கருதி முன்னர் கூறப்படுகிறது. மெய்யெழுத்து உயிருடன் கூடி ஒலிப்பதால் தனித்தியங்கும் ஆற்றல் பெறாததால் உயிரெழுத்துக்குப் பின்பு கூறுப்படுகிறது. எழுத்துகளின் வடிவத்தைக் கூறுகின்ற போது உயிர் எழுத்து மெய் எழுத்து இணைந்து உயிர்மெய் எழுத்துகளாகின்றன. தமிழ் எழுத்துகளின் வகைகளைக் கூறுமிடத்து இவ்வெழுத்துகளைத் தொல்காப்பியர் கூறவில்லை. முப்பத்து மூன்று எழுத்துகளை மட்டும் கூறியுள்ளார் என்பது தெளிவாகிறது. வரிவடிவத்தைப் பற்றி தொல்காப்பிய ஆராய்ச்சி நூலில் (ப.38) **"தமிழ் மொழி நூலார், வரி வடிவம் ஒலி வடிவம் எனும் இரண்டையுமே எழுத்து என்று அழைப்பதால் மொழி உருவாக்கப்பட்;டபோதே வரிவடிவ எழுத்தும் படைத்துக்கொள்ளப்பட்டது என்று அறியலாம். எழுத்தில் கொணர்ந்த பின்னர்தான் மொழியின் பயன் விரிவடைந்து நிலைத்த தன்மையைப் பெற்றது, ஆதலின் தமிழ் வரி வடிவத் தோற்றக் காலம் வரையறுத்து உரைக்க முடியாத மிகப்பழங்காலம் என்றுதான் கூறலாம்"** என்று சி.இலக்குவனார் குறிப்பிடுகிறார்.

தமிழ் நெடுங்கணக்கில் வரி வடிவங்கள் காலம்தோறும் மாறுபட்டு இன்றைய நிலையை அடைந்துள்ளன. இன்று எழுதுவோரின் அழகுணர்ச்சிக்கேற்ப, அச்சுக்கோர்ப்பதற்கு ஏற்ப வரிவடிவங்கள் மாற்றம் கண்டு தோற்றளிக்கின்றன. அச்செழுத்துகளில் வரிவடிவ வேற்றுமைகளைக் காணமுடிகிறது.

**எழுத்துகளின் மயக்கம்:**

ஒரு எழுத்து மற்றோர் எழுத்துடன் கூடி நிற்பது அடுத்தடுத்து அருகில் வருவது எழுத்து மயக்கம் எனப்படுகிறது. தொல்காப்பியர் இதனை,

**"அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்**
**மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை"** (தொல்.நூ.எ.22)

என்று மெய்யொலிகளின் மயக்க நிலையினைக் கூறுகிறார். ஒரே மெய்யெழுத்து இரட்டித்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் என்றும் இருவேறு மெய்கள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்று புலப்படுத்துகிறார். எட்டு நூற்பாக்களில் (தொல்.நூ.23-30) மெய்யெழுத்துகளுக்கான மயக்க விதியினை எடுத்துரைக்கிறார். எ.டு: காக்கை- உடனிலை மெய்ம்மயக்கம், சேர்தல்- வேற்றுநிலை மெய்ம்மயக்கம். எழுத்து மயங்கும் நிலையினைக் கூறுகின்ற சொல்லான மெய்ம்மயக்கம் என்பதில் ம்-ம என்பன உடனிலை மெய்ம்மயக்கமாக வந்துள்ளதன் வழியாக தொல்காப்பியரின் நுட்புலனறிவைக் காணமுடிகிறது.

தொல்காப்பியரின் மரபுப்படி மெய்ம்மயக்கங்கள் சொற்களின் இடையில் வருகின்றன. தற்காலத்தில் பிறமொழிச் சொற்களை அவற்றின் ஒலிப்பு மாறாமல் தமிழில் எழுதுவதற்கு மெய்ம்மயக்கச் சொல் சொற்களின் முதலிலும் இறுதியிலும் வருகின்றன. எ.டு: க்ரைம், சிமெண்ட். இவை தமிழ் மரபுக்கு ஏற்புடையது அன்று.

**இசையில் எழுத்துகள்:**

இசையுடன் பொருள் கொள்வதற்கு ஏற்ற வகையில் எழுத்துகள் அமைகின்றன. தொல்காப்பியர் இதனை,

**"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்"** (தொல்.நூ.எ.33)

என்று கூறுகிறார். இதில் உயிர், மெய் எழுத்துகள் நீண்டு ஒலிப்பது கூறப்பட்டுள்ளது. வயங்கிழாஅய் இவ்விடத்தில் ழா-ழ் +ஆ அய் என வந்துள்ளது. செய்யுளில் அளபெடுக்கும் எழுத்துகளுள் நெட்டெழுத்துக்களான ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்ற ஏழு எழுத்துகளை கூறுகிறார். அளபெடுத்தற்கு அடையாளமாக அதன் இனமான அ.இ.உ.எ.ஒ என்ற ஐந்து குறில் எழுத்துகள் எழுதப்படுவதாக கூறுகின்றார். மேலும், **"மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே"** (தொல்.நூ.எ.5) என்ற நூற்பாவில் மூன்று மாத்திரை அளபு ஒலிக்கும் எழுத்து தமிழில் இல்லை என்று கூறுகின்றார். இதனை, இளம்பூரணனார் தெளிவாக உரையில் 'உயிரளபெடை யெழுத்திற்கு மாத்திரை கூறுதல் நுதலிற்று' என்று கூறுகிறார். மூவளபு இசைப்பது அளபெடைக்குக் கிடையாது என்பது இதன் வழிப் புலனாகிறது. இக்கருத்தினைப் பற்றி அக்னிபுத்திரன் புதிய நோக்கில் தொல்காப்பியம் (ப.52) என்ற நூலில் **"வடமொழியில் ஒரு மாத்திரை எழுத்து**

**ஹரஸ்வம் என்றும், இரண்டு மாத்திரை எழுத்து திர்க்கம் என்றும், மூன்று மாத்திரை எழுத்து ப்லுதம் என்றும் அழைக்கப்படுகிறது"** என்று எடுத்துரைக்கிறார்.
இதன் மூலம் 'ஒரெழுத்து இன்றே' என்று கூறுவதன் வழியாக மூன்று அளபு ஒலிக்கும் எழுத்தானது அவை அருகில் உள்ள எழுத்துடன் சேர்ந்து அளபெடையாக மட்டும் நிற்கும் அப்போது நெடிலுக்கு இரண்டு மாத்திரை குறிலுக்குத் தனியாக ஒரு மாத்திரை என கணக்கிட வேண்டும் என்பது புலனாகிறது.

**முடிவுரை:**

தொல்காப்பியம் தமிழ் மொழிக்கு அடிப்படையாக அமைகின்ற எழுத்துகளின் வகைகளைமுப்பத்து மூன்று என்று கூறுகின்றது. உயிரெழுத்து பன்னிரண்டு, மெய்யெழுத்து பதினெட்டு, சார்பெழுத்து மூன்று என்று கூறுகிறது. எழுத்துகளின் ஒலிவடிவமாக முப்பத்து மூன்று எழுத்துகள் உள்ளன. உயிர்மெய்யெழுத்துகளை வரிவடிவம் கூறுகின்ற போது அதற்கான வடிவம் கொடுத்து தொல்காப்பியர் கூறியுள்ளார். எழுத்துகளின் வகைகளைக் கூறுமிடத்து உயிர்மெய்யெழுத்தின் வகையினைக் கூறவில்லை இதன் மூலம் தமிழ் எழுத்துகள் முப்பத்து மூன்று என்பதைத் தொல்காப்பியத்தின் வழி உணரமுடிகிறது. எழுத்துகள் ஒலிக்கக் கண் இமைக்கின்ற கைந்நொடிக்கின்ற கால அளவினை எடுத்துக் கொள்கின்றன. எழுத்துகளின் மயக்கங்கள் மெய்யெழுத்திற்கு உரியதாக உள்ளது புலனாகிறது. எழுத்துகள் செய்யுட்களில் இசைக்காக அளபெடுத்து வருவதை உணரமுடிகிறது. எழுத்துகள் மூவளபு இசைத்தல் தமிழில் இல்லை என்பது தெளிவாகிறது. தொல்காப்பிய நூன் மரபுச்செய்திகள் தமிழ் மொழி எழுத்துகளின் தன்மைகளை எடுத்தியம்புகின்றன என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. அக்னிபுத்திரன்.எல்.கே. - புதிய நோக்கில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-600 108, முதல் பதிப்பு:நவம்பர் 2008.
2. இளம்பூரணனார்(உ.ஆ)- தொல்காப்பியம்-சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை- 14, 17ஆம் பதிப்பு:2022.
3. இலக்குவனார்.சி- தொல்காப்பிய ஆராய்ச்சி, அபிராமி பதிப்பகம், சென்னை- 600013, முதற் பதிப்பு:2000.
4. சிவஞான முனிவர்- தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.
5. திருஞானசம்பந்தம்.சு(உ.ஆ)- நன்னூல்-சொல்லதிகாரம் காண்டிகை உரை, கதிர்பதிப்பகம், திருவையாறு-613 204, முதற் பதிப்பு: நவம்பர் 2008.